# குளியாப்பிட்டி நகர சபை

## குருநாகல் மாவட்டம்

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக் கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2011 ஏப்ரல் 11 ஆந் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2010 மே 05 ஆந் திகதியும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

### 1.2 அபிப்பிராயம்

எனது பரிசீலனைகளிலிருந்து தென்படுவதும் எனக்களிக்கப்பட்ட உயர் தகவல்களுக்கும் விளக்கங்களுக்கும் அமைய குளியாப்பிட்டி நகர சபை 2010 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கு உரிய கணக்குப் புத்தகங்களைப் பராமரித்து வந்திருந்திருந்தது என்றும், இவ்வறிக்கையில் 1.3 ஆம் பந்தியில் காட்டப்பட்டவாறான விடயங்களால் நிதிசார் கூற்றுக்களின் மீது ஏற்படும் தாக்கங்களைத் தவிர 2010 திசெம்பர் 31 இல் உள்ளபடி குளியாப்பிட்டி நகர சபையின் நிலைவரம் மற்றும் அத்தினத்தில் முடிவுற்ற ஆண்டிற்கான அதன் செயற்பாடுகளிலிருந்தான நிதிசார் விளைவு என்பவற்றை உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் பிரதிபலிக்கும் விகையில் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ள கணக்கீட்டு தத்துவங்களுக்கு அமைவாக நிதிசார் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்றும், நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

### 1.3 நிதிசார் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

(அ) நிலையான சொத்துப் பதிவேட்டின் பிரகாரம் மீளாய்வாண்டின் இயந்திரமும் இயந்திர உபகரணங்களினதும் கொள்வனவு ரூபா 436,964 ஆக இருந்த போதிலும் நாட்குறிப்பு 2 இன் மூலம் மீளாய்வாண்டில் ரூபா 3,072,904 தொகையானது மூலதன ஈடுபடுத்தலுக்கான வருமானப் பங்களிப்புக் கணக்கில் இயந்திரமும் இயந்திர உபகரணங்களினதும் கொள்வனவாகக் காட்டப்பட்டிருந்தது.

(ஆ) நாட்குறிப்பு 03 இன் பிரகாரம் மீளாய்வாண்டின் மோட்டார் வாகனமும் வண்டியும் கொள்வனவு செய்ததாக ரூபா 3,472,356 மூலதனமாக்கப்பட்டு காட்டப்பட்ட போதும் மீளாய்வாண்டில் மோட்டார் வாகனமும் வண்டியும் கொள்வனவு செய்தல் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே முன்னைய வருடங்களில் மூலதனமாக்கப்படாத மோட்டார் வாகனமும் வண்டிகளினதும் பெறுமதி மாத்திரம் ரூபா 272,190 ஆக இருந்தது.

### 1.3.2 கணக்கிணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

வைப்புக் கணக்கு விடயங்களுக்குரிய கட்டுப்பாட்டுக் கணக்குகளின் பிரகாரம் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 20,512,152 ஆக இருந்ததுடன் துணைப் பதிவேடுகள்/ அறிக்கைகளின் பிரகாரம் கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 24,018,031 ஆக இருந்தது.

### 1.3.3 விளக்கமளிக்கப்படாத வேறுபாடுகள்

ஓய்வூதிய நிதியக் கணக்கு விடயத்துக்குரிய விளக்கமளிக்கப்படாத ரூபா 149,496 தொகையான மீதியொன்று காணப்பட்டது.

### 1.3.4 செலுத்த வேண்டிய கணக்குகள்

2010 திசெம்பர் 31 இல் 01 ஆண்டுக்கும் மேலாக செலுத்த வேண்டியிருந்த 2 கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 10,630,542 ஆக இருந்தது.

### 1.3.5 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

#### தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாமை

பட்டோலைகளும் காலப்பகுப்பாய்வுகளும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாமையில் ரூபா 10,905,608 கூட்டுத்தொகையான 03 கொடுக்கல் வாங்கல்களை கணக்காய்வின் போது திருப்திகரமானதாக சான்றுறுதி செய்யமுடியாதிருந்தது.

## 2. நிதிசார் மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூக்களின் பிரகாரம் 2009 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டெழும் செலவினத்திற்கும் மேலான வருமானம் ரூபா 10,312,842 ஆக இருந்ததுடன் இதனையொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்திற்கும் மேலான வருமானம் ரூபா 15,874,920 ஆக இருந்தது.

### 2.2 நிதிக்கட்டுப்பாடு

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) இலங்கைக் குடியரசின் நிதிப்பிரமாணம் 371 இல் காட்டப்பட்டதன் படி முற்பணமானது உரிய செயற்பாடு நிறைவு பெற்ற உடன் முடிவுறுத்தப்பட வேண்டியிருந்த போதிலும் மீளாய்வாண்டு மற்றும் முன்னைய வருடத்தில் 3 சந்தர்ப்பங்களின் கீழ் வழங்கப்பட்டிருந்த ரூபா 64,970 தொகையான முற்பணத்தை தீர்ப்பதற்கு 11 தொடக்கம் 21 மாத காலம் வரையான தாமதம் ஏற்பட்டிருந்தது.

(ஆ) 2006 ஆம் ஆண்டிலிருந்து காணப்படுகின்றதும் தற்போது சேவையிலில்லாத சமயாசமய ஊழியர்களுக்காக வழங்கப்பட்டிருந்த விழா மற்றும் விசேட முற்பணம் ரூபா 35,277 மீதியானது மீளாய்வாண்டு இறுதி வரையிலும் தீர்க்கப்பட்டிருக்கவில்லை.

(இ) 02 வங்கிக் கணக்கிற்குரிய வழங்கப்பட்டிருந்தும் கொடுப்பனவுக்காக 6 மாதத்திற்கு மேற்பட்ட காலமாக சமர்ப்பிக்கப்படாத ரூபா 3,195 பெறுமதியான 03 காசோலைகள் சம்பந்தமாக இலங்கைக் குடியரசின் நிதிப் பிரமாண இலக்கம் 396 இன் அறிவுறுத்தல்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) உத்தியோகத்தர் கடன் வங்கிக் கணக்கில் வைப்பிலிடப்பட்டிருந்தும் வசூலிக்கப்படாத ரூபா 1,007 பெறுமதியான காசோலையொன்று காணப்பட்டது.

## 2.3 வருமான நிர்வாகம்

### 2.3.1 மதிப்பிடப்பட்ட வருமானம், உள்ளபடியான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

தலைவரினால் மீளாய்வாண்டிற்கும் முன்னைய ஆண்டிற்குமாகச் சமர்ப்பிக்கப்பட்ட மதிப்படப்பட்ட வருமானம், உள்ளபடியான வருமானம் மற்றும் நிலுவை வருமானம் என்பவை பற்றிய தகவல்கள் கீழே காட்டப்பட்டள்ளன.

| | வருமான விடயம் | 2010 | | | 2009 | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | மதிப்பிடப் பட்ட | உள்ள படியான | திசெம்பர் 31 இல் திரண்ட நிலுவை | மதிப்பிடப் பட்ட | உள்ள படியான | திசெம்பர் 31 இல் திரண்ட நிலுவை |
| | | ரூபா "000 | ரூபா "000 | ரூபா "000 | ரூபா "000 | ரூபா "000 | ரூபா "000 |
| (i) | இறைகள் மற்றும் வரிகள் | 14,380 | 12,947 | 10,019 | 10,509 | 11,819 | 7,790 |
| (ii) | வாடகை | 8,863 | 6,969 | 2,314 | 8,139 | 9,765 | 4,206 |
| (iii) | அனுமதிப்பத்தரக் கட்டணங்கள் | 11,432 | 11,639 | 122 | 8,171 | 9,121 | 329 |
| (iv) | ஏனைய வருமானங்கள் | 43,363 | 9,155 | 8,608 | 37,402 | 37,099 | 11,833 |
| | மொத்தம் | 78,038 | 40,710 | 21,063 | 64,221 | 67,804 | 24,158 |

### 2.3.2 முத்திரைக் கட்டணம்

2010 திசெம்பர் 31 வரை பதிவாளர் நாயகத்திடம் இருந்து முத்திரைக் கட்டணமாக ரூபா 7,819,862 பெறப்பட வேண்டியிருந்தது.

### 2.3.3 கேளிக்கை வரி

உள்ளூராட்சி ஆணையாளரின் 2007 ஒக்தோபர் 01 ஆந் திகதிய LG/MA/13 ஆம் இலக்க கேளிக்கை வரி கடிதத்தின் பிரகாரம் 2006 மே 31 ஆந் திகதியிலிருந்து கேளிக்கை வரித் தொகை மீள்நிரப்புதல் கைவிடப்பட்டிருந்தமையினால் முழுமையான கேளிக்கைவரியில் 20% ஆன அளவை சினிமா அரங்குகளிலிருந்து அறவீடு

செய்வதற்கு சபையினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. சினிமா அரங்கு உரிமையாளர்கள் அதற்கு இணங்காத காரணத்தினால் 10% ஆன அளவு மாத்திரம் செலுத்துமாறு வேண்டப்பட்ட போதிலும் சினிமா உரிமையாளர்கள் அவ்வாறு வரிப்பணம் செலுத்தாமையினால் நகர சபையினால் 2010 சனவரி 28 ஆந் திகதிய வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டதன் பிரகாரம் நுழைவுச்சீட்டுக்களின் பெறுமதியில் 20% ஆன தொகை கேளிக்கைவரி பட்டியலிட்ட காரணத்தினால் மீளாய்வாண்டின் இறுதிவரையில் இரண்டு சினிமா அரங்கிற்குரிய நிலுவை கேளிக்கைவரி வருமானம் ரூபா 1,441,342 ஆக இருந்தது.

### 2.3.4 கடை வாடகை

நகர சபைக்குரிய கடைகளின் ஒப்பந்தங்களின் பிரகாரம் நிலுவைப் பணம் அறவிடப்படாமையின் காரணமாக 04 தொடக்கம் 26 மாதம் வரையான காலப்பகுதியில் 58 கடைகளுக்கான ரூபா 1,026,967 நிலுவை வாடகை வருமான மீதியொன்று காணப்பட்டது.

### 2.3.5 நீர்க்கட்டணம்

(I) சபையினால் பராமரிக்கப்படுகின்ற நீர் சுத்திகரிப்புக் கூடத்தில் சுத்திகரிப்பு செய்யப்படுகின்ற நீரின் அளவு மற்றும் விநியோகிக்கின்ற நீரின் அளவு என்பவற்றை இனங்காணக்கூடிய வகையில் நீர்மாணியொன்று ஏற்படுத்தப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே சுத்திகரிப்பு செய்யப்பட்ட நீரின் அளவு மற்றும் நீர் பாவனையாளர்களிடம் பட்டியலிட்ட நீரின் அளவு மற்றும் சபையில் காணப்பட்ட 19 பொது நீர்க்குழாய்களினால் உபயோகிக்கப்படுகின்ற நீரின் அளவு சம்பந்தமாக வேறாக இனங்காணலோ அல்லது பிரித்தல்களோ நகர சபையினால் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. சபையினால் நீர்க்கட்டணப் பட்டியல்களைத் தீர்ப்பது தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுப் பரிசோதனையின் போது நீர்ப்பாவனையாளர்களில் 24 பேருக்காக மாதாந்தம் சமமான அளவுகளில் பட்டியலிடல்கள் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் அதில் நிலையான கட்டணம் அறவீடு செய்வதற்கான காரணம் கண்டுபிடிக்கப்பட்டு அவசியமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(II) 2009 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு நீர்க்கட்டணப் பட்டியலிடல் பதிவேடுகளின் பிரகாரம் நீர்க்கட்டணப் பட்டியல்களைச் செலுத்தாதிருந்த நீர்ப் பாவனையாளர்களிடமிருந்து 06 தொடக்கம் 18 மாதகாலம் வரை அறவிட வேண்டியிருந்த நிலுவை நீர்க்கட்டணம் ரூபா 1,329,001 ஆக இருந்தது.

(III) நகர சபையினால் பல்வேறு காலகட்டங்களில் நீர்வழங்கல் துண்டிக்கப்பட்டிருந்தன. 2009 சனவரி 01 ஆந் திகதிக்கு முன்னிருந்து நீர் பாவனையாளர்கள் 17 பேரிடமிருந்து அறவிட வேண்டியிருந்த ரூபா 70,117 தொகையான நிலுவை நீர்க்கட்டண மீதியொன்று மீளாய்வாண்டு இறுதி வரையிலும் காணப்பட்டது.

### 2.3.6 அறிவித்தல் பலகைக் கட்டணம்

2003 ஆம் ஆண்டிற்கு முன்னைய வருடங்களிலிருந்து கொண்டுவரப்படுகின்ற ரூபா 15,932 தொகையான நிலுவை அறிவித்தல் பலகை வருமானமொன்று காணப்பட்டது.

### 2.3.7 ஆதனவரி

மீளாய்வாண்டின் இறுதியில் ஆதனவரி நிலுவை ரூபா 6,544,680 ஆகக் காணப்பட்டதுடன் முன்னைய வருடத்துடன் இணக்கஞ் செய்த போது அதில் முறையான அதிகரிப்பொன்றைக் காணக்கூடியதாக இருந்தது. நிலுவையை அறவீடு செய்வதற்காகக் காணப்பட்ட 12 வருமான முன்மொழிவு நிகழ்ச்சித்திட்டங்களின் கீழ் ரூபா 578,280 தொகையானது மீளாய்வாண்டின் போது சேகரிக்கப்பட்டிருந்த போதிலும் கணக்காய்வின் போது மேற்கொள்ளப்பட்ட மாதிரிப் பரிசோதனைகளின் பிரகாரம் வட்டாரம் 07 இற்குரிய ரூபா 20,000 தொகைக்கு அதிகமான நிலுவை மீதிகள் காணப்படுகின்ற 23 வரி செலுத்துனர்களும் வட்டாரம் 2 இற்குரிய 3 – 17 காலாண்டு வரையான வீச்சினுள் நிலுவை வரிசெலுத்துனர்கள் 51 பேரும் இனங்காணப்பட்டிருந்தனர். இந் நிலுவையை அறவீடு செய்தவற்காக நகர சபைக் கட்டளைச் சட்டத்தின் 170(2) ஆம் பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.4 செலவினக் கட்டமைப்பு

மீளாய்வாண்டிற்கும் முன்னைய ஆண்டிற்குமாக சபையின் பாதீடு செய்யப்பட்ட மற்றும் உள்ளபடியான செலவுகள் தொடர்புடைய முரண்களுடன் கீழே தரப்படுகின்றன.

| செலவின வகை | 2010 பாதீடு செய்யப்பட்டவை | 2010 உள்ள படியானவை | 2010 முரண் | 2009 பாதீடு செய்யப்பட்டவை | 2009 உள்ள படியானவை | 2009 முரண் |
|---|---|---|---|---|---|---|
| | ரூபா “000 | ரூபா “000 | ரூபா “000 | ரூபா “000 | ரூபா “000 | ரூபா “000 |
| ஆளுக்குரிய வேதனம் | 44,296 | 37,329 | 6,967 | 42,331 | 34,971 | 7,360 |
| ஏனையவைகள் | 23,824 | 19,928 | 3,896 | 19,778 | 16,658 | 3,120 |
| உப மொத்தம் | 68,120 | 57,257 | 10,863 | 62,109 | 51,629 | 10,480 |
| மூலதனச் செலவு | 19,265 | 17,908 | 1,357 | 45,607 | 25,460 | 20,147 |
| முழு மொத்தம் | 87,385 | 75,165 | 12,220 | 107,716 | 77,089 | 30,627 |

## 2.5 மனித வள முகாமைத்துவம்

**அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உள்ளபடியான பதவியினர் எண்ணிக்கை**

2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சபையின் அங்கீகரிக்கப்பட்ட பதவியினர் எண்ணிக்கையும் உள்ளபடியான பதவியினர் எண்ணிக்கையும் பற்றிய தகவல்கள் கீழே தரப்படுகின்றன.

| பதவியினர் தரங்கள் | அங்கீகரிக்கப்பட்டவை | உள்ளபடியானவை |
|---|---|---|
| புதவி நிலைத் தரம் | 04 | 03 |
| இரண்டாம் தரம் | 26 | 21 |
| ஆரம்ப தரம் | 85 | 70 |
| ஏனையவர்கள் (சமயா சமயம்/ தற்காலிகம்) | - | 78 |

## 2.6 சொத்துக்கள் முகாமைத்துவம்

### 2.6.1 பெறவேண்டிய கணக்குகள்

2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பெறவேண்டிய கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 22,259,882 ஆக இருந்ததுடன் 01 ஆண்டிற்கு மேலாகக் காணப்பட்ட கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 14,455,866 ஆக இருந்தது.

### 2.6.2 அறவிடப்பட வேண்டியுள்ள பதவியினர் கடன்

2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 01 ஆண்டு காலத்துக்கு மேலாக அறவீடு நிலுவையாகக் காணப்பட்ட கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 27,138 ஆக இருந்தது.

### 2.6.3 மெய்மையாய்வு செய்யப்படாத சொத்துக்கள்

பொருள்மெய்மையாய்வு அறிக்கையின் பிரகாரம் உறுதிப்படுத்த முடியாத 2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறு புத்தகப் பெறுமதி அடிப்படையில் கணிப்பீடு செய்யப்பட்ட களஞ்சிய இருப்புக்களின் பெறுமதி ரூபா 13,280,902 ஆக இருந்தது.

## 2.7 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்

சபையினால் நீர்மாணி வாசிப்பு மற்றும் நிலுவை நீர்க்கட்டண அறவீடு செய்தலுக்காக சுகாதார உதவியாளர்கள் 5 பேர் சேவைக்குப் பெறப்பட்டிருந்ததுடன் அவர்களினால் நீர்ப்பாவனையாளர்களிடமிருந்து நேரடியாக நீர்க்கட்டணம் அறவிடப்படுகின்ற முறைமையொன்று அவதானிக்கப்பட்டதுடன் அதன் அடிப்படையில் அவர்களுக்கு 10% ஆன தரகுப்பணமும் சபையினால் செலுத்தப்பட்டிருந்தது. அவ்வாறே 2010 ஆம் ஆண்டில் இச் செயற்பாட்டிற்காக வேண்டி அவ்வுதவியாளர்கள் 5 பேருக்கும் ரூபா 106,140 தரகுப்பணம் செலுத்தப்பட்டிருந்தது. இந் நடவடிக்கைகளுக்காக சபையின் அங்கீகாரம் பெறப்பட்டிருந்த போதிலும் உள்ளூராட்சி ஆணையாளரின் எவ்வித அங்கீகாரமும் பெறப்பட்டிருக்கவில்லை.

## 2.8 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

சபையில் சேவையாற்றி ஓய்வு பெற்று உள்ளூராட்சி ஓய்வூதிய நிதியத்திற்கு பங்களிப்புத் தொகையினைச் செலுத்த வேண்டிய ஊழியர்களுக்கு சபையினால் மேற்கொள்ளப்பட்ட நிதியத்திற்குச் செலுத்த வேண்டிய பங்களிப்பு பணம் உரிய முறையில் செலுத்தப்படாததன் காரணமாக மீளாய்வாண்டின் இறுதிவரை அந்த நிதியத்திற்குச் செலுத்த வேண்டிய மீதி ரூபா 6,043,886 ஆக இருந்தது. அவ்வாறே சபைக்குரிய மாதாந்த தவணைப் பணமாக ரூபா 31,581 படி அந்த நிதியத்தினால் அறவீடு செய்யப்பட்டிருந்தும் அந்த அறவீடுகள் சபையின் எந்த ஊழியர்கள் தொடர்பானவை என்பதனை சபை அறிந்து கொண்டிருக்கவில்லை.

## 2.9 செயலாற்றல்

(அ) வருடாந்த பாதீட்டின் மூலம் 32 மீண்டெழும் செலவின விடயங்களுக்காக ஏற்பாடு செய்யப்பட்ட ரூபா 936,000 மொத்தத் தொகையும் உரிய செயற்பாட்டிற்கு ஈடுபடுத்தப்படாமல் சேமிக்கப்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டின் போது 15 நலன்புரி மற்றும் நானாவித நினழ்ச்சித்திட்டங்களுக்காக ரூபா 6,041,000 தொகை பாதீட்டின் ஊடாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த போதிலும் அதில் ரூபா 1,903,448 தொகை மாத்திரமே பயன்பாட்டிற்கு எடுக்கப்பட்டிருந்தது.

(இ) விடய இலக்கம் 52517 இல் பொதுச் சந்தை பழுதுபார்த்தல் செலவினத்திற்காக பாதீட்டின் ஊடாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ரூபா 500,000 ஆன ஏற்பாட்டிற்கு மேலதிகமாக 52517(2) இன் செலவின விடயத்தின் கீழ் ரூபா 18 மில்லியன் மீள்நிரப்பும் ஏற்பாடொன்று பெறப்படுவதற்குரிய நிதியப் பாய்ச்சல் உரிய முறையில் காணபிக்கப்படாமல் திரண்ட நிதியமாகக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஈ) மீளாய்வாண்டின் போது 50 மூலதன செயற்திட்டங்களுக்காக ரூபா 13,325,500 தொகை ஏற்பாடு செய்யப்பட்டிருந்த போதிலும் அதற்குரிய செயற்திட்டங்கள் மீளாய்வாண்டினுள் அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 2.10 உள்ளகக் கணக்காய்வு

நிறுவனத்தில் போதிய அளவில் உள்ளகக் கணக்காய்வு இடம் பெற்றிருக்கவில்லை.

## 3. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டு அம்சங்கள் தொடர்பாக விசேட அவதானம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) நிதிக் கட்டுப்பாடு
(இ) வருமானக் கட்டுப்பாடு
(ஈ) சொத்துக்கள் முகாமைத்துவம்
(உ) ஒப்பந்த நிருவாகம்